2005 மார்ச் 29]

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எஸ். மகாலிங்கம்.

திரு. எஸ். மகாலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேட்காமலே வாரி வழங்கும் வள்ளல் மனம் படைத்த மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியில், அவிநாசி தொகுதியில், அவிநாசி, அன்னூர், திருமுருகன்பூண்டி என்ற மூன்று பேரூராட்சிகள் உள்ளன. அவை தற்போது சிறப்பு நிலை ஊராட்சிகளாக உருவாக்கப்பட்டுள்ளன. இப்போது அவிநாசி முப்பதாயிரம் மக்கள் தொகை கொண்ட பேரூராட்சியாக இருப்பதால், நடப்பு நிதி ஆண்டில் மூன்றாம் நிலை நகராட்சியாக உருவாக்கித் தரப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2001 ஆம் ஆண்டுக் கணக்கெடுப்பின்படி, முப்பதாயிரம் மக்கள் தொகை கொண்ட பேரூராட்சிகள் மூன்றாம் நிலை நகராட்சிகளாக மாற்றப்பட்டன. அவற்றில் 2001 ஆம் ஆண்டுக் கணக்கெடுப்பின்படி, முப்பதாயிரத்திற்கும் குறைந்த, ஆயிரம், இரண்டாயிரம் மக்கள் தொகை குறைந்த அளவிலே இருக்கின்றவை பற்றித்தான் இன்றையதினம் குழுக்கள் அமைக்கப்பட்டு அந்தக் குழுக்களிலே அவை பரிசீலிக்கப்படுகின்றன. அப்படி அந்தக் குழுக்களிலே மாண்புமிகு உறுப்பினர் கோரிய பேரூராட்சியானது கொடுக்கப்பட்டிருந்தால் அது அந்தக் குழுக்கள் மூலமாகப் பரிசீலனை செய்யப்பட்டால், அம்மாவினுடைய அரசானது அதை மூன்றாம் நிலை நகராட்சியாக மாற்றுவதற்கு ஆவன செய்யும் என்று கூறி, அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 231, திருமதி சான்ட்ரா டான் க்ரவல், மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

231—

கட்டட வசதி

***18626—திருமதி சான்ட்ரா டான் க்ரவல்:**

மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னை, அமைந்தகரையிலுள்ள ஆங்கிலோ இந்தியன் பள்ளியின் கட்டடத்தைப் பழுதுபார்ப்பதற்காக ரூ. 20.00 இலட்சத்திற்கும் குறைவாக ஒரே தடவையில் செலவு செய்ய சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட நிதியைப் பயன்படுத்த அரசு அனுமதி அளிக்குமா?

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2004–2005 ஆம் ஆண்டுக்கான சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டச் செயலாக்க வழிகாட்டு நெறிமுறைகளின்படி, இத்திட்ட நிதியிலிருந்து அரசு நிதி உதவி பெறும் கல்வி நிறுவனத்திற்குச் செலவு செய்ய இயலாது. எனவே, சட்டமன்ற உறுப்பினர் கோரியுள்ள பணியான, சென்னை, அமைந்தகரையிலுள்ள ஆங்கிலோ இந்தியன் பள்ளியின் கட்டடம் பழுதுபார்க்கும் செலவினை சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட நிதியிலிருந்து செய்ய வழிவகை இல்லை.*

TMT. SANDRA DAWN GREWAL: Hon. Speaker Sir, First I would like to thank our Hon. Chief Minister for enhancing the M.L.A.s Constituency Development Fund to rupees one crore. (Thumping of desks) Will the Government be pleased to relax the rules for the nominated M.L.A., Constituency Development Fund, as a special case, just once, for repairs of only one School, St. George's Anglo Indian Higher Secondary School and Orphanage which is a Government aided Anglo Indian Management School and the only school consisting of an Orphanage and where 75% of the students are below the poverty line?

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை, அமைந்தகரையிலுள்ள ஆங்கிலோ இந்தியன் பள்ளி, அரசு நிதியுதவி பெறும் கல்வி நிறுவனமாகும். மேலும் அரசுப் பள்ளிகள் மற்றும் ஊராட்சி அமைப்புகளால் நடத்தப்படும் பள்ளிகளின் கட்டடங்கள் மட்டுமே அரசுக்குச் சொந்தமானவை. அரசு உதவி பெறும் கல்வி நிறுவனங்களின் கட்டடங்கள் மற்றும் அடிப்படை வசதிகள், சம்பந்தப்பட்ட பள்ளியை நடத்தும் கல்வி நிறுவனங்களுக்கே சொந்தமானவை. எனவே, இப்பள்ளிகளின் அடிப்படை வசதிகளின்மீது அரசுக்கு எந்த உரிமையும் இல்லை. அரசு நிதி உதவி பெறும் பள்ளியின் கட்டடங்கள் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் அரசு நிதியிலிருந்து பராமரித்தல் மற்றும் பராமரிக்கப்படும் சொத்துக்களின்மீது அரசு எந்த உரிமையும் கோர*

2005 மார்ச் 29]

முடியாது. இத்திட்டத்தின்கீழ் அரசு ஆணையில் அனுமதிக்கப்பட்டுள்ள சொத்துக்களைப் புதுப்பித்தல் மற்றும் தர மேம்பாடு செய்தல் போன்ற சிறப்புப் பழுதுபார்த்தல் பணிகளை அரசு மற்றும் உள்ளாட்சி நிறுவனங்களுக்குச் சொந்தமான பள்ளிக் கட்டடங்களுக்கு மட்டுமே மேற்கொள்ள இயலும். எனவே, அரசு நிதி உதவி பெறும் கல்வி நிறுவனத்திற்கு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட நிதியினைப் பயன்படுத்த வழிவகை ஏதுமில்லை.

முற்பகல் 10–40

HON. SPEAKER: Sandra, give a request to our Amma.

வினா எண் 232, திரு. பெ. பழனியப்பன், மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

232—

தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி

***11093—திரு. பெ. பழனியப்பன்:**

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பாப்பிரெட்டிப்பட்டி வட்டம், இருளப்பட்டியிலுள்ள தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியைப் பிரித்து, எச். புதுப்பட்டியில் புதிதாகத் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி தொடங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இருளப்பட்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியைப் பிரித்து, எச். புதுப்பட்டியில் புதிய தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி தொடங்க சாத்தியக்கூறுகள் இல்லை. (ஆ) கேள்வி எழவில்லை.

திரு. பெ. பழனியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என்னுடைய காலை வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். தருமபுரி மாவட்டம், பாப்பிரெட்டிப்பட்டி

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
சட்டமன்றப் பேரவை
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS